*கவனிக்க.- 07.09.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1776 - 2012 සැප්තැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2012.09.14

*1776 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1336 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


***கவனிக்க.*** *- (i) சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, ஓகத்து மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

*(ii) சிறிலக பிரஜா சாந்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

## *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2012, ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***பி. கே. எஸ். ரவீந்திர,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யுன் மாதம் 23 ஆந் திகதி.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

## வடமேல் மாகாண மாகாண சபை

*1995 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க வடமேல் மாகாண கூட்டுறவு சேவையாளர் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் பிரசுரிக்கப்படும் அறிவித்தல்*

வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும் உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாகம், மனித வலு, கல்வி மற்றும் கலாசார நடவடிக்கை, காணி, போக்குவரத்து, சூழல், சுற்றுலா முதலீட்டு இணைப்பு, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும், விநியோகமும் அமைச்சர் சட்டத்தரணி அதுல சரத் குமார விஜேசிங்க ஆகிய நான் வடமேல் மாகாண மாகாண சபையின் 1995 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க வடமேல் மாகாண கூட்டுறவு சேவை ஆணைக்குழுவின் கட்டளைச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின்படி நடைமுறைக்கு வருமாறு, வடமேல் மாகாண கூட்டுறவு சேவையாளர் ஆணைக்குழுவின்படி, அந்த கட்டளைச் சட்டத்தின் 05 ஆம் பிரிவில் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கீழ் தரப்பட்டுள்ள பெயருடையவர்கள் 2012.08.01 ஆந் திகதி தொடக்கம் 2015.07.31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்காக வடமேல் மாகாண கூட்டுறவு சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

இன்னும் இந்த கட்டளைச் சட்டத்தின் 07 ஆம் பிரிவின்படி மேற்கூறப்பட்ட ஆணைக்குழுவின் தலைவராக திருமதி வெல்லாகே தொன் ஹென்ரி சந்திரத்ன 2012.08.01 ஆந் திகதி தொடக்கம் 2015.07.31 ஆந் திகதி வரையான காலத்திற்காக நியமிக்கப்பட்டுள்ளதாக இத்தால் மேலும் அறிவிக்கின்றேன்.

அதுல சரத் குமார விஜேசிங்க,
முதலமைச்சரும் நிதி, திட்டமிடல்,
சட்டமும் ஒழுங்கும் உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாகம்,
மனித வலு கல்வி மற்றும் கலாசார நடவடிக்கை, காணி,
போக்குவரத்து, சூழல், சுற்றுலா முதலீட்டு இணைப்பு, கூட்டுறவு
அபிவிருத்தி அத்துடன் உணவு வழங்கலும், விநியோகமும் அமைச்சர்.
வடமேல் மாகாண மாகாண சபை.

2012.08.09.

| | பெயர் | முகவரி |
|---|---|---|
| 1. | திரு. வெல்லாகே தொன் ஹென்ரி சந்திரத்ன | கிரிந்திகல்ல, இப்பாகமுவ |
| 2. | திரு. குணவீர விஜேசிங்க | சுந்தராபொல வீதி, யந்தம்பலாவ, குருநாகலை |
| 3. | திரு. நுவர பக்ஷகே குலதுங்க | "உதேனி", வத்தேகெதர, வெல்லவ. |

8-265

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.